தினமணி

**உணவுப் பணவீக்கம் 12.21 சதவீதமாக உயர்வு**

First Published : 04 Nov 2011 01:42:28 AM IST



புது தில்லி, நவ.3: நாட்டின் உணவுப் பணவீக்கம் அக்டோபர் 22-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் 12.21 சதவீதமாக உயர்ந்தது. முந்தைய வாரத்தில் இது 11.43 சதவீதமாக இருந்தது.

காய்கறிகள், பருப்பு, பழங்கள், பால் உள்ளிட்ட அனைத்துப் பொருள்களின் விலை கடுமையாக உயர்ந்ததே பணவீக்க உயர்வுக்கு முக்கியக் காரணமாகும்.

மொத்த விலைப் புள்ளி அட்டவணை அடிப்படையில் உணவுப் பணவீக்கம் கணக்கிடப்படுகிறது. முந்தைய ஆண்டு இதே காலத்தில் உணவுப் பணவீக்கம் 13.55 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

அக்டோபர் மாதத்தில் காய்கறிகளின் விலை 28 சதவீதமும், பருப்பு, பழங்கள், பால் ஆகியவற்றின் விலை தலா 11 சதவீதமும் உயர்ந்து காணப்பட்டது.

முட்டை, இறைச்சி, மீன் ஆகியவற்றின் விலையும் 1336 சதவீதம் உயர்ந்திருந்தது.

இருப்பினும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வெங்காயத்தின் விலை மட்டும் 20 சதவீதம் குறைந்திருந்தது. கோதுமை விலை 1.54 சதவீதம் குறைந்திருந்தது.

பிரணாப் கவலை: உணவுப் பொருள்களின் விலை உயர்ந்து பணவீக்கமும் அதிகரித்திருப்பது கவலையளிப்பதாக மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார். தொடர்ந்து இரட்டை இலக்க நிலையிலேயே இருப்பது அபாயகரமானதாக உள்ளது என்று அவர் கூறினார்.

இருப்பினும் இந்த பணவீக்க உயர்வு தீபாவளி பண்டிகையை ஒட்டி ஏற்பட்டது என்று குறிப்பிட்ட அவர் வரும் வாரங்களில் இது குறையக்கூடும் என்றார். நடப்பு நிதி ஆண்டின் எஞ்சிய நான்கு மாதங்களில் பணவீக்கத்தின்உண்மையான நிலையை உணர முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

வாராந்திர அடிப்படையில் முதன்மைப் பொருள்களின் பணவீக்கம் 12.08 சதவீதமாக உயர்ந்துள்ளது. முந்தைய வாரத்தில் இது 11.75 சதவீதமாக இருந்தது. ஒட்டுமொத்த விலைக் குறியீட்டெண் பட்டியலில் முதன்மைப் பொருள்களின் பங்களிப்பு 20 சதவீதமாகும். உணவு அல்லாத கண்ணாடியிழை, எண்ணெய் வித்துகள், தனிமங்கள் உள்ளிட்ட பிற பொருள்களின் விலை 6.43 சதவீதம் உயர்ந்திருந்தது. எரிபொருள், மின்சாரம் ஆகியவற்றின் பணவீக்கம் 14.50 சதவீதமாக உயர்ந்திருந்தது.

இந்த ஆண்டு ஜனவரி 29-ம் தேதிக்குப் பிறகு பணவீக்கம் இந்த அளவுக்கு உயர்ந்திருப்பது இதுவே முதல் முறையாகும். ஜனவரி 29-ல் உணவுப் பணவீக்கம் 12.94 சதவீதமாக இருந்தது.

**நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தினால் அதிக மகசூல் பெறலாம்'**

First Published : 03 Nov 2011 01:25:57 PM IST

நாகப்பட்டினம், நவ. 2: விவசாயத்தில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தினால் அதிக மகசூல் பெறலாம் என்றார் மத்திய அரசின் வேளாண் துறை இணைச் செயலர் இ.கே. மஜ்ஹி.

நாகை மாவட்டம், கீழையூர் ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட, திருமனங்குடியில் புதன்கிழமை நடைபெற்ற விவசாயிகளுடனான கலந்துரையாடலில் அவர் பேசியது:

விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தினால், மகசூல் பெருகும். விவசாயம்தான் நாட்டின் முதுகெலும்பு என்ற நிலையில், விவசாயத்தை ஊக்குவிக்க பயிர்க் கடன், வங்கிக் கடன், பயிர்க் காப்பீடு உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

விவசாயிகள், வேளாண் துறை அலுவலர்களைத் தொடர்பு கொண்டு, தொழில்நுட்ப முறைகளை அறிந்து, அவற்றை பயன்படுத்தி உற்பத்தியில் முதலிடம் பெற வேண்டும்.

வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம், குறைந்த வாடகை அடிப்படையில் நடவு மற்றும் அறுவடை இயந்திரங்களை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். திருந்திய நெல் சாகுபடி மூலம், நாற்றுகள் தயாரிக்க விவசாயிகளுக்கு மானிய விலையில் டிரே வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வரும் நிதியாண்டில் நிறைவேற்றப்படும் என்றார் அவர். இதைத்தொடர்ந்து, வேளாண் துறை மற்றும் தோட்டக் கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை ஆகியவற்றின் சார்பில் பயனாளிகளுக்கு மானியத்துடன் கூடிய உபகரணங்களை வழங்கினார். முன்னதாக, அகணி கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தைப் பார்வையிட்டார். நடவு இயந்திரத்தின் பயன்பாடு குறித்து கருவேலி கிராமத்தில் பொதுமக்களிடம் கேட்டறிந்தார்.

மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி, வேளாண் துறை இணை இயக்குநர் முருகானந்தம், வேளாண்மை ஆணையரக வேளாண் துணை இயக்குநர் பாலாஜி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தினால் அதிக மகசூல் பெறலாம்'**

First Published : 03 Nov 2011 01:25:57 PM IST

நாகப்பட்டினம், நவ. 2: விவசாயத்தில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தினால் அதிக மகசூல் பெறலாம் என்றார் மத்திய அரசின் வேளாண் துறை இணைச் செயலர் இ.கே. மஜ்ஹி.

நாகை மாவட்டம், கீழையூர் ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட, திருமனங்குடியில் புதன்கிழமை நடைபெற்ற விவசாயிகளுடனான கலந்துரையாடலில் அவர் பேசியது:

விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தினால், மகசூல் பெருகும். விவசாயம்தான் நாட்டின் முதுகெலும்பு என்ற நிலையில், விவசாயத்தை ஊக்குவிக்க பயிர்க் கடன், வங்கிக் கடன், பயிர்க் காப்பீடு உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

விவசாயிகள், வேளாண் துறை அலுவலர்களைத் தொடர்பு கொண்டு, தொழில்நுட்ப முறைகளை அறிந்து, அவற்றை பயன்படுத்தி உற்பத்தியில் முதலிடம் பெற வேண்டும்.

வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம், குறைந்த வாடகை அடிப்படையில் நடவு மற்றும் அறுவடை இயந்திரங்களை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். திருந்திய நெல் சாகுபடி மூலம், நாற்றுகள் தயாரிக்க விவசாயிகளுக்கு மானிய விலையில் டிரே வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வரும் நிதியாண்டில் நிறைவேற்றப்படும் என்றார் அவர். இதைத்தொடர்ந்து, வேளாண் துறை மற்றும் தோட்டக் கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை ஆகியவற்றின் சார்பில் பயனாளிகளுக்கு மானியத்துடன் கூடிய உபகரணங்களை வழங்கினார். முன்னதாக, அகணி கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தைப் பார்வையிட்டார். நடவு இயந்திரத்தின் பயன்பாடு குறித்து கருவேலி கிராமத்தில் பொதுமக்களிடம் கேட்டறிந்தார்.

மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி, வேளாண் துறை இணை இயக்குநர் முருகானந்தம், வேளாண்மை ஆணையரக வேளாண் துணை இயக்குநர் பாலாஜி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 200 ஊக்கத் தொகை வழங்கக் கோரிக்கை**

First Published : 03 Nov 2011 01:27:08 PM IST

திருவாரூர், நவ. 2: நெல்லுக்குக் குவிண்டாலுக்கு ரூ. 200 ஊக்கத் தொகை வழங்கி, தமிழக அரசு கொள்முதல் செய்ய வேண்டும் என காங்கிரஸ் விவசாயப் பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து காங்கிரஸ் விவசாயப் பிரிவு பொதுச் செயலர் நெடுவை டி. ராஜதுரை தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனு:

தற்போது மத்திய அரசு நெல்லுக்கு அறிவித்துள்ள விலையிலிருந்து ரூ. 50, ரூ. 70 விலை உயர்வு செய்து தமிழக அரசு அறிவித்துள்ளது போதுமானதல்ல. விவசாயத் தொழிலாளர்கள் பற்றாக்குறை, பொருளாதாரப் பற்றாக்குறை, உரத் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு உள்ளிட்ட பல்வேறு சிரமங்களுக்கிடையே உற்பத்தி செய்யும் நெல்லை விற்பனை செய்வதில் விவசாயிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, விவசாயிகளின் நலன் கருதி 25 சதம் வரை ஈரப்பதம் உள்ள நெல்லை நிபந்தனையின்றி கொள்முதல் செய்ய வேண்டும். கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக அனைத்து விவசாயிகளுக்கும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் கடன் வழங்கி வந்த போதிலும், தற்போது பல்வேறு காரணங்களைக் கூறி கடன் மறுக்கப்படுகிறது. இதே நிலைதான் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும் நீடிக்கிறது.

விவசாயத்தின் மீது விவசாயிகளுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தவும், உணவு உற்பத்தியைப் பெருக்கவும் அனைத்து விதமான உதவிகளை அரசு வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்.

**தொடர் மழை: விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்க ஏற்பாடு**

First Published : 03 Nov 2011 01:25:36 PM IST

திருவாரூர், நவ. 2: திருவாரூர் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக நீரால் சூழப்பட்டுள்ள பயிர்களைப் பார்வையிட்டு, உரிய தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்க வேளாண்மைத் துறை ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக பெய்து வரும் பருவ மழை காரணமமாக, மாவட்டம் முழுவதும் நடவு செய்யப்பட்டுள்ள சம்பா மற்றும் தாளடி நெல் பயிர்கள் ஏறத்தாழ 20 சதம் அளவுக்கு நீரால் சூழப்பட்டுள்ளன.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை பிற்பகலுக்குப் பின்னர் புதன்கிழமை பிற்பகல் வரை மழை இல்லை. இதனால், வயல்களில் தேங்கி நின்ற மழை நீர் வடிந்து வருகிறது.

இதற்கிடையே, நீரால் சூழப்பட்டுள்ள நெல் பயிர்களைப் பாதுகாக்கும் முறைகள் குறித்து வேளாண் இணை இயக்குநர் க. மயில்வாகணன் கூறியது:

பரவலான மழை காரணமாக பள்ளமான பகுதிகளில் நெல் பயிர்களை மழை நீர் சூழ்ந்துள்ளது. கடந்த இரு தினங்களுக்கு முன்பிருந்ததைவிட தற்போது நீர் வேகமாக வடிந்து வருகிறது.

மழை நீரால் சூழப்பட்ட நெல் பயிருக்கு இலை வழி உரமிட வேண்டும். 2 சத டிஏபி, 1 சத யூரியா, 1 சத பொட்டாஷ் கரைசலை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். தண்ணீர் வடிந்த நிலையில் உரப் பற்றாக்குறை உள்ள நெல் பயிருக்கு அமோனியம் குளோரைடு 42 அல்லது 50 கிலோ, அமோனியம் சல்பேட் அல்லது யூரியா 22 கிலோ, 18 கிலோ ஜிப்சம், 4 கிலோ வேப்பம் புண்ணாக்கு ஆகியவற்றை கலந்து ஒரு நாள் வைத்திருந்து அத்துடன் 17 கிலோ பொட்டாஷ் சேர்த்து தூவ வேண்டும்.

தண்ணீர் வடிய வாய்ப்பில்லாத வயலில் துத்தநாகம் மற்றும் தழைச்சத்து பற்றாக்குறை தென்பட்டால் 2 கிலோ யூரியா, 1 கிலோ சிங்க் சல்பேட் உரத்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து இலை வழியாகத் தெளிக்க வேண்டும். காலத்தில் நடவு செய்ய இயலாமல் வயதான நாற்றை நடவு செய்ய வேண்டிய சூழ்நிலைக்கு குத்துக்கு 5 நாற்று வீதம் நடவு செய்ய வேண்டும். மேலும் தழைச் சத்தை 25 சதம் கூடுதலாக்கி அதனை மேலுரமாக இட வேண்டும்.

தொடர்ந்து மழை பெய்ததாலும், வானிலை மேகமூட்டத்துடன் உள்ளதாலும் நடவு செய்யப்பட்ட நெல் பயிரில் இலை சுருட்டுப் புழு, குருத்துப்பூச்சி, கூண்டுப்புழு, ஆனைக்கொம்பன், ஈ, புகையான் போன்ற பூச்சிகளும் நோய்களான குலைநோய், இலைப்புள்ளி நோய், பாக்டீரியா இலை கருகல் நோய் போன்ற நோய்களும் தாக்க வாய்ப்புள்ளது.

எனவே, வேளாண் துறையின் அனைத்து தொழில்நுட்ப அலுவலர்கள் தங்களது பகுதியில் உள்ள வயல்களைப் பார்வையிட்டு, விவசாயிகளை சந்தித்து தக்க பரிந்துரைகளை வழங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றார் அவர்.

**"விவசாயிகளின் தேவையை நிறைவு செய்வதில் கவனம்'**

First Published : 03 Nov 2011 01:34:04 PM IST

திருச்சி, நவ. 2: விவசாயிகளின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், புதிய ஆய்வுத் திட்டங்கள் இருக்கும் என்றார் இந்திய வேளாண் ஆய்வுக் குழுமத்தின் இயக்குநரும், வேளாண் ஆய்வு மற்றும் விரிவாக்கத் துறைச் செயலருமான எஸ். அய்யப்பன்.

திருச்சி அருகே போதாவூரில் உள்ள தேசிய வாழை ஆய்வு மையத்தில் ரூ. 1.50 கோடியில் கட்டப்பட்ட புதிய கட்டடத் திறப்பு விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

இந்த விழாவில் அவர் மேலும் பேசியது:

"விவசாயிகளுக்கு உள்ள பிரச்னைகளை அறிந்து அவற்றுக்குத் தீர்வு காணும் வகையிலான ஆய்வுத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்காகச் சிறப்பு நிதியும் வழங்கப்படும். இதன்படி, மொத்த ஒதுக்கீட்டில் 3 சத நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

மேலும், அறுவடை செய்யப்பட்ட விளைபொருள்களைப் பதப்படுத்துதல், பாதுகாப்பாகச் சேமித்தல், மதிப்புக் கூட்டுப் பொருள்கள் தயாரித்தல் போன்றவற்றில் கவனம் செலுத்தப்படும்.

கண்டுபிடிக்கப்பட்ட தொழிநுட்பங்களுக்குக் காப்புரிமை பெற ஊக்கப்படுத்தப்படும்.

12-வது ஐந்தாண்டு திட்டத்தில் வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடைப் பராமரிப்பு, மீன் வளம் மற்றும் அவற்றைச் சார்ந்த துறைகள் என மொத்தம் 27 வகைகளில் ஆய்வுத் திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன' என்றார் அய்யப்பன்.

பின்னர், மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுத் திட்டங்களைப் பார்வையிட்டார். அப்போது, வாழை விவசாயிகளுக்கு உள்ள பிரச்னைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார் அவர்.

**நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தினால் அதிக மகசூல் பெறலாம்'**

First Published : 03 Nov 2011 01:25:57 PM IST

நாகப்பட்டினம், நவ. 2: விவசாயத்தில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தினால் அதிக மகசூல் பெறலாம் என்றார் மத்திய அரசின் வேளாண் துறை இணைச் செயலர் இ.கே. மஜ்ஹி.

நாகை மாவட்டம், கீழையூர் ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட, திருமனங்குடியில் புதன்கிழமை நடைபெற்ற விவசாயிகளுடனான கலந்துரையாடலில் அவர் பேசியது:

விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தினால், மகசூல் பெருகும். விவசாயம்தான் நாட்டின் முதுகெலும்பு என்ற நிலையில், விவசாயத்தை ஊக்குவிக்க பயிர்க் கடன், வங்கிக் கடன், பயிர்க் காப்பீடு உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

விவசாயிகள், வேளாண் துறை அலுவலர்களைத் தொடர்பு கொண்டு, தொழில்நுட்ப முறைகளை அறிந்து, அவற்றை பயன்படுத்தி உற்பத்தியில் முதலிடம் பெற வேண்டும்.

வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம், குறைந்த வாடகை அடிப்படையில் நடவு மற்றும் அறுவடை இயந்திரங்களை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். திருந்திய நெல் சாகுபடி மூலம், நாற்றுகள் தயாரிக்க விவசாயிகளுக்கு மானிய விலையில் டிரே வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வரும் நிதியாண்டில் நிறைவேற்றப்படும் என்றார் அவர். இதைத்தொடர்ந்து, வேளாண் துறை மற்றும் தோட்டக் கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை ஆகியவற்றின் சார்பில் பயனாளிகளுக்கு மானியத்துடன் கூடிய உபகரணங்களை வழங்கினார். முன்னதாக, அகணி கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தைப் பார்வையிட்டார். நடவு இயந்திரத்தின் பயன்பாடு குறித்து கருவேலி கிராமத்தில் பொதுமக்களிடம் கேட்டறிந்தார்.


மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி, வேளாண் துறை இணை இயக்குநர் முருகானந்தம், வேளாண்மை ஆணையரக வேளாண் துணை இயக்குநர் பாலாஜி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தினமலர்

உண்மையின் உரைகல்

**உணவுப் பொருள் பணவீக்கம் 12.21 சதவீதமாக அதிகரிப்பு**

நவம்பர் 04,2011,00:35




புதுடில்லி:நாட்டின் உணவுப் பொருள் பணவீக்கம், அக்டோபர் 22ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், 12.21 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 11.43 சதவீதமாக இருந்தது. ஆக, உணவுப் பொருள் பணவீக்கம், 0.78 சதவீதம் அதிகரித்துள்ளது. உணவுப் பொருள் பணவீக்கம், தொடர்ந்து மூன்று வாரங்களாக, இரட்டை இலக்க அளவில் இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், காய்கறிகள் விலை, 28.89 சதவீத அளவிற்கு அதிகரித்துள் ளது.மேலும்,பருப்பு

வகைகள் (11.65 சதவீதம்),பழங்கள்(11.63 சதவீதம்),பால்(11.73 சதவீதம்)ஆகியவற்றின் விலையும் உயர்ந்திருந்தது.இதுதவிர,மீன்,முட்டை,இறைச்சி ஆகிய வற்றின் விலை,13.36 சதவீதமும்,உணவு தானியங்கள் விலை, 4.13 சதவீதமும் அதிகரித்துள்ளது.இருப்பினும், வெங்காயத்தின் விலை, 20.33 சதவீதமும், கோதுமை விலை, 1.54 சதவீதம் என்ற அளவிலும் குறைந்திருந்தது. முக்கிய பொருட்களின் விலை, 12.08 சதவீதம் என்ற அளவில் உயர்ந்துள் ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 11. 75 சதவீதம் என்ற அளவில் குறைந்து காணப்பட்டது. மொத்த விலைக் குறியீட்டு எண் கணக்கீடு செய்வதில், முக்கிய பொருட்களின் பங்களிப்பு, 20 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது.உணவு சாராத பொருட்கள் பிரிவின் கீழ், நூலிழை, எண்ணெய் வித்துக்கள் மற்றும் தாதுப் பொருட்களின் விலை, 6.43 சதவீதம் என்ற அளவில் குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 7.67 சதவீதம் என்ற அளவில் அதிகரித்துக் காணப்பட்டது. கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், எரிபொருள் மற்றும் மின்சாரத்தின் விலை, 14.50 சதவீதம் என்ற அளவில் குறைந் துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில்,14.70 சதவீதம் என்ற அளவில் அதிகரித்திருந்தது.நாட்டின் பொதுப் பணவீக்கம், 2010ம் ஆண்டு டிசம்பர் முதல், 9 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்து வருகிறது. இது, கடந்த செப்டம்பர் மாதத்தில், 9.72 சதவீதமாக இருந்தது.பணவீக்கத்தைக் கட்டுக்குள் கொண்டு வரும் வகையில், ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கான வட்டி விகிதத்தை, 2010ம் ஆண்டு மார்ச் மாதம் முதல், தற்போது வரை, 13 முறை உயர்த்தி யுள் ளது. மேலும், வரும் டிசம்பருக்குள் தேவைக்கும், அளிப்பிற்கும் இடையிலான பற்றாக்குறை குறைந்து, வரும் மார்ச் மாதத் திற்குள் பணவீக்கம், 7 சதவீதமாகக் குறையும் என, ரிசர்வ் வங்கி இரண்டாவது காலாண்டு நிதிக் கொள்கையின் போது தெரிவித்தது.பணவீக்க உயர்வு குறித்து, மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறுகையில், "நாட்டின் உணவுப் பொருள் பணவீக்கம், தொடர்ந்து அதிகரித்து வருவது, கவலை அளிப்பதாக உள்ளது. பண்டிகைக் காலங்களையொட்டி, உணவுப் பணவீக்கம் அதிகமாக இருக்க லாம். எனினும், நடப்பு நிதியாண்டின் கடைசி நான்கு மாதங்களில், பண வீக்கத்தின் உண்மை நிலை தெரிய வரும்' என்று தெரிவித்தார்.

**மஞ்சள், வாழை பயிர்கள்மழையால் அழுகும் அபாயம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 04,2011,02:38 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் தொடர் மழையால் மஞ்சள், வாழை ஆகிய பயிர்கள் அழுகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.ஈரோடு மாவட்டத்தில் அக்டோபர் 15ம் தேதி வரை வாட்டி எடுத்த வெயிலுக்கு விடிவாக, வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த மண்டலத்தால் நல்ல மழை பெய்கிறது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி பவானி 61.7 மி.மீ., ஈரோடு 40, சத்தியமங்கலம் 14, கோபி 13.2, பெருந்துறை 6, பவானிசாகர் 6, தாளவாடி 6, கொடுமுடி 3 மி.மீ., மழை பதிவானது. நேற்றும் மழை பெய்தது.

மாவட்டத்தில் 15 நாட்களுக்கு மேலாக தொடர்ந்து மழை பெய்வதால், மஞ்சள், வாழை ஆகிய பயிர்கள் அழுகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மஞ்சள் பயிர் கொடுமுடி பகுதியில் அதிகபட்சமாக 3,363 ஹெக்டேரும், நம்பியூர் பகுதியில் குறைந்த பட்சமாக 161 ஹெக்டேர் என மாவட்ட அளவில் 12 ஆயிரத்து 664 ஹெக்டேரும், அம்மாபேட்டையில் வாழை அதிகப்பட்டமாக 584 ஹெக்டேரும், குறைந்த பட்சமாக அந்தியூரில் 33 ஹெக்டேர் என 2,786 ஹெக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. வேளாண் துறையினர் கூறுகையில், ""விட்டுவிட்டு மழை பெய்வதால், பெரும்பாலான வயல்களில் நீர் வடிந்து விடுகிறது. மஞ்சள், வாழை பயிர்களில் நான்கு நாட்களுக்கு மேல் தொடர்ந்து நீர் தேங்கினால், அவை அழுக வாய்ப்புள்ளது. நெல், சோளம், கரும்பு போன்ற பயிர்களுக்கு இந்த மழை உதவியாக இருக்கும். மிக பலத்த மழை, இடைவிடாமல், நீர் வடிய வழியின்றி பெய்தால் அவை பாதிக்கக்கூடும். அதுவரை பிரச்னை இல்லை. வாழை, மஞ்சளுக்கு இந்த மழையால் பூச்சித் தாக்குதல் ஏதும் இருக்காது,'' என்றனர்.

**உரம் விலை உயர்வுக்கு மத்திய அரசே காரணம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 04,2011,02:37 IST

கோபிசெட்டிபாளையம்: ""மத்திய அரசின் இயலாமை, குறிப்பிட்ட நேரத்தில் டெண்டர் விடாததால் உரத்தின் விலை பல முறை உயர்ந்துள்ளது,'' என, வேளாண் அமைச்சர் செங்கோட்டையன் பேசினார்.அ.தி.மு.க., 40வது ஆண்டு துவக்க விழா மற்றும் உள்ளாட்சி தேர்தல் வெற்றி விழா பொதுக்கூட்டம் கோபியில் நடந்தது. வேளாண் அமைச்சர் செங்கோட்டையன் பேசியதாவது:எம்.ஜி.ஆர்., அ.தி.மு.க.,வை 1972ல் துவக்கியபோது, "சினிமாவைப் போல் நூறு நாள் காட்சியாக இந்த கட்சி மறையப் போகிறது' என, கருணாநிதி சொன்னார்.

39வது ஆண்டு முடிந்து 40வது ஆண்டில் அ.தி.மு.க., அடியெடுத்து வைப்பதை பார்க்கும் போது, இந்த இயக்கத்தை தமிழகத்தில் யாராலும் அசைக்க முடியாது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

உள்ளாட்சி தேர்தல் வெற்றி அ.தி.மு.க.,வுக்கு கொடுக்கப்பட்டுள்ள அங்கீகாரம். இது கருணாநிதிக்கு பிடிக்காது. "2ஜி' வழக்கு எங்கள் ஆட்சியிலா தொடரப்பட்டது? மத்தியில் உங்கள் ஆட்சி நடக்கிறது. கூட்டணி கட்சியை சேர்ந்தவர்கள்தான் உங்களை கைது செய்துள்ளனர்.

உரம் விலை பல முறை உயர்ந்துள்ளது. மத்திய அரசின் இயலாமை, குறிப்பிட்ட நேரத்தில் டெண்டர் விடாத காரணத்தால், உரம் விலை உயர்கிறது.
கோபியில் மூன்று கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. இன்னும் சில நாட்களில் ஏழு கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை அமைக்க, டெண்டர் கோரப்படும். கோபியில் சாலை பிரச்னை இனி இருக்காது.இவ்வாறு அவர் பேசினார்.நகர செயலாளர் காளியப்பன் தலைமை வகித்தார். எம்.எல்.ஏ.,கள் வெங்கடாசலம், ரமணீதரன், எம்.பி., சிவசாமி, ஜெ.,பேரவை செயலாளர் சிந்துரவிசந்திரன், நகராட்சி தலைவர் ரேவதிதேவி, யூனியன் சேர்மன் சத்தியபாமா, கோபி ஒன்றிய செயலாளர் மனோகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**கோரம்பள்ளம் குளத்தில் தண்ணீர் வரத்து அதிகரிப்பு: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 04,2011,00:11 IST

தூத்துக்குடி : கோரம்பள்ளம் குளத்தில் தற்போது தண்ணீர் வரத்து அதிகரித்து வருவதால் இந்தாண்டு விவசாயம் செழிப்படையும் என விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். தமிழகம் முழுவதும் கடந்த ஒருவாரமாக பருவமழை பரவலாக பெய்து வருகிறது. இதனால் ஏரி, குளம் உட்பட நீர்லைகள் நிரம்பி வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்திலும் நல்ல மழை பெய்து வருகிறது. மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கனமழை பெய்தது. குறிப்பாக சாயர்புரம், குலையன்கரிசல், அத்திமரப்பட்டி, கூட்டாம்புளி, முள்ளக்காடு, தட்டப்பாறை, அய்யனடைப்பு போன்ற பல்வேறு கிராமங்களில் பெய்துவரும் மழையினால் காற்றாற்று வெள்ளம் கரைபுரண்டு செல்கிறது. இதனால் கோரம்பள்ளம் குளத்திற்கு தண்ணீர் வரத்து அதிகரித்து வருகிறது. தொடர்ந்து தண்ணீர் வரத்து அதிகரித்து வருவதால் மறுகால் செல்கிறது. கோடைகாலத்தில் கோØ டமழை சரியாக பெய்யாததால் குளம் வரண்டு காணப்பட்டது. இதனால் விளைநிலங்களில் பயிரிட்ட வாழை கன்றுகள் கருகும் நிலை ஏற்பட்டது. பாபநாசம் அணையில் நீர்மட்டம் குறைந்து காணப்பட்டதால் கோடைகாலத்தில் நீர்வரத்து குØ றந்து காணப்பட்டது. இதனால் விவசாயிகள் கலக்கமடைந்தனர். தற்போது பெய்துவரும் பருவமழையால் கோர ம்பள்ளத்திலுள்ள இரண்டு குளத்திற்கும் நீர் வரத்து அதிகரித்து வருவதால் இந்தாண்டு விவசாயம் மற்றும் குடிநீர் தேவைகள் பூர்த்தியாகும் என விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

**கருங்குளம் பகுதியில் அரசு திட்டத்தின் கீழ் நெல் பயிரிட விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 04,2011,00:11 IST

செய்துங்கநல்லூர் : கருங்குளம் பகுதியில் அரசு திட்டத்தின் கீழ் நெல் பயிரிட விவசாயிகளுக்கு அதிகாரிகள் அழைப்பு விடுத்துள்ளனர். அரசு திட்டமாக திருந்திய நெல் சாகுபடித் திட்டத்தின் கீழ் நெல் சாகுபடி செய்ய விவசாயிகளை அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர். கடந்த சில தினங்களாக கருங்குளம் பகுதியில் மழை பெய்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தற்போது இப்பகுதியில் நாற்று பாவும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் அரசு திட்டமான திருந்திய நெல் சாகுபடித் திட்டத்தின் கீழ் நெல் பயிரிட அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் சாகுபடி செய்தால் செலவு குறையும். ஆனால் மகசூல் அதிகம் கிடைக்கும். கடந்த காலங்களில் இத்திட்டத்தின் கீழ் சாகுபடி செய்த விவசாயிகள் ஏக்கருக்கு 2 1/2 டன் நெல் மகசூல் பெற்றுள்ளனர். அதே சமயம் அரசு மானியமும் உள்ளது. உரம் வாங்குவதற்கு ரூ.800-யையும், உருளைக்கு ரூ.850யையும், 75 ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு களைக் கருவியும் அரசு வழங்குகிறது. மொத்தத்தில் ஒரு ஹெக்டேருக்கு ரூ.3 ஆயிரம் அரசு மானியம் வழங்குகிறது. இதுகுறித்து அதிகாரி ஒருவர் கூறுகையில், திருந்திய நெல் சாகுபடித்திட்டத்தில் இணைய விவசாயிகள் தயங்குகிறார்கள். காரணம் தொழிலாளர்கள் பிரச்னை தான். தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இப்பகுதி விவசாயிகள் வேலை பார்த்து சுகம் கண்டுள்ளனர். எனவே கடினமான விவசாயத் தொழிலில் ஈடுபட அவர்கள் மறுக்கின்றனர். இதனால் தான் விவசாயிகளும் தயக்கம் காட்டுகின்றனர். இப்பகுதியில் அம்பை 16 ரக நெல் விதை அதிகமாக விற்பனையாகி உள்ளது. இது நோய் மற்றும் பூச்சி தாக்குதலை தாங்கி நிற்க கூடியது. மார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்பனை ஆவதால் இந்த ரக நெல் விதைக்கு டிமான்ட் உள்ளது. தற்போது கருங்குளம் பகுதியில் சுமார் 3000 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அம்பை 16 பயிரிட்ட 110 நாட்களில் மகசூல் பெறலாம் என்பதால் அதிகமானோர் பயிரிடுகின்றனர். திருந்திய நெல் சாகுபடித் திட்டத்தின் கீழ் இதுவரை நெல் விதை ஏக்கருக்கு 3 கிலோ என்று சிபாரிசு செய்யப்பட்டு வந்தது. இம்முறை அது ஏக்கருக்கு 2 கிலோ என குறைக்கப்பட்டு பரிந்துரை செய்யப்படுகிறது. எனவே விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி திட்டத்தில் பயிரிட்டு அதிக மகசூல் பெற்று அதிக பணம் பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

**கொள்முதல் விலை உயர்த்தவிவசாய சங்கம்வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 04,2011,02:22 IST

ஈரோடு: "நெல் உள்பட விவசாய விளை பொருட்கள் கொள்முதல் விலையை இரு மடங்கு உயர்த்த வேண்டும்' என்று தமிழக விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.
தமிழக விவசாயிகள் சங்க (கட்சி சார்ப்பற்றது) ஈரோடு மாவட்ட கூட்டம், சங்க அலுவலகத்தில் நடந்தது. தலைவர் குமாரசாமி தலைமை வகித்தார்.உர மானியத்தின் பலன் நேரடியாக விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்து, கடுமையாக உயர்ந்துள்ள உரம் விலையை குறைக்க, மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது நெல் உள்ளிட்ட விவசாய விளை பொருட்களின் கொள்முதல் விலையை இரு மடங்காக உயர்த்த வேண்டும்.

கலப்பட உரம் தயாரிப்பவர்கள், பதுக்கல்காரர்கள், கடத்தல்காரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்து, உர வினியோகத்தை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்.விவசாயத்துக்கு தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். முன்னறிவிப்பின்றி மின் தடை செய்வதை தவிர்த்தும், மின் மாற்றிகள், மின் பாதைகளை சீரமைத்து மின் தேவைக்கும், மின் சப்ளைக்கும் ஏற்ற அளவில் மாற்றி அமைக்க வேண்டும்.மஞ்சளுக்கு லாபம் கிடைக்கும் வகையில், கொள்முதல் விலையை நிர்ணயித்து, உபரியை அரசே கொள்முதல் செய்ய வேண்டும். காவிரி நதி நீர் மாசுபாட்டைக் கண்டித்தும், விழிப்புணர்வு ஏற்படுத்த சமயத்துறவிகள் அமைப்பு நடத்தும் யாத்திரைக்கு ஆதரவு தெரிவித்தல் என்பது உள்பட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**பாபநாசம் அணை நீர்மட்டம் 92.4 அடியாக உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 04,2011,00:21 IST

விக்கிரமசிங்கபுரம் : பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று மீண்டும் சுமார் 3 அடி அதிகரித்து காலை நிலவரப்படி 92.40 அடியாக இருந்தது. அணையின் நீர்பிடிப்பு பகுதிகளிலிருந்து பாபநாசம் அணைக்கு தொடர்ந்து தண்ணீர் வந்து கொண்டிருப்பதால் நேற்று முன்தினம் 89.70 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று மேலும் சுமார் 3 அடி உயர்ந்து காலை நிலவரப்படி 92.40 அடியாகியது. அணைக்கு விநாடிக்கு 1835.49 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது.
அணைப்பகுதியில் 9 மி.மீ., கீழணையில் 5 மி.மீ., சேர்வலாறு அணைப்பகுதியில் 6 மி.மீ அளவில் மழை பதிவாகியுள்ளது. சேர்வலாறு அணை நீர்மட்டம் நேற்று 113.88 அடியாக இருந்தது. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 51.70 அடியாக இருந்தது. காரையார், சேர்வலாறு பகுதியில் கடந்த 2 நாட்களாக மழையின் அளவு குறைந்துவிட்டதால் அணைக்கு வரும் நீரின் அளவும் வெகுவாக குறைந்துவிட்டது. இருந்தபோதிலும் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளிலிருந்து

அணைக்கு தண்ணீர் வந்து கொண்டிருப்பதால் அணையின் நீர்மட்டம் மேலும் சில அடி உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**தக்காளி கிலோ ரூ.35**

பதிவு செய்த நாள் : நவம்பர் 03,2011,22:28 IST

கோவை : கோவை சுற்றுவட்டார பகுதிகளில் தொடர்மழை நீடிப்பதால் தக்காளி அறுவடை முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளது; விலையும் கணிசமாக உயர்ந்தது. தொண்டாமுத்தூர், மதுக்கரை, பெரியநாயக்கன்பாளையம், சர்க்கார் சாமக்குளம், கிணத்துக்கடவு, நாச்சிபாளையம், போளுவாம்பட்டி உள்ளிட்ட கோவை சுற்றுவட்டார பகுதிகள்; மைசூர், ராயக்கோட்டை, ஒசூர் உள்ளிட்ட வெளியூர்களில் இருந்தும் கோவை மார்க்கெட் மற்றும் உழவர்சந்தைகளுக்கு தக்காளி, விற்பனைக்கு வருகின்றன. கடந்த இரண்டு வாரங்களாக தமிழகம் முழுவதும் தொடர் மழை நீடிப்பதால், அனைத்து காய்கறிகளின் வரத்தும் தடைப்பட்டது. காய்கறிகளில் ஆயுட்காலம் மிகவும் குறைவான தக்காளி வரத்து, சமீப நாட்களாக பெருமளவு குறைவாகவே உள்ளது. கடந்த வாரம் முழுவதும் 25 ரூபாய்க்கு மேல் தாண்டாத தக்காளி விலை, தற்போது உழவர் சந்தைகளில் நாட்டு தக்காளி 26 ரூபாய், ஆப்பிள் தக்காளி 30 ரூபாய் எனவும், மார்க்கெட்களில் இரு தக்காளிகளும் 35 க்கு மேல் விற்கப்படுகின்றன. இந்த விலை அதிகரிப்பால் மளிகைக்கடைகளில் கிலோ 40 ரூபாய் வரை விற்கப்பட்டன.

வியாபாரிகள் கூறியதாவது: கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் பத்து லாரிகளுக்கு மேல் வந்துகொண்டியிருந்தன. தற்போது வெறும் ஐந்து லாரிகள் மட்டுமே வருகின்றன. பெங்களூர் மார்க்கெட்களில் தக்காளிக்கு நல்ல விலை இருப்பதால் ஒசூர் மற்றும் மைசூர் பகுதிகளில் இருந்து கோவைக்கு வரும் தக்காளியின் வரத்து குறைந்தது. இதுபோக கோவை சுற்றுவட்டார பகுதிகளில் தொடர் மழையின் காரணமாக தக்காளி அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் மற்றும் வெளியூர் தக்காளி வரத்து குறைந்துள்ளதால் விலை உயர்ந்துள்ளது. மழை தாக்கம் குறைந்தபின் விலை தானாக குறையும். இவ்வாறு, அவர்கள் கூறினர்.

**இரண்டாவது முறையாக நிரம்பியது ஆழியாறு அணை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 03,2011,22:28 IST

பொள்ளாச்சி : மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்யும் மழையால், இந்தாண்டு இரண்டாவது முறையாக ஆழியாறு அணை நிரம்பியுள்ளது. பி.ஏ.பி., திட்டத்திலுள்ள ஆழியாறு அணையில் அதிகபட்சமாக 120 அடி தண்ணீர் தேக்க முடியும். கடந்த 2ம் தேதி 119.60 அடி நீர்மட்டம் இருந்தது. இரவு 11.00 மணிக்கு அணைக்கு அதிகப்படியான தண்ணீர் வந்ததால், அணையின் முழுக்கொள்ளளவும் நிரம்பி மூன்று மதகுகள் வழியாக வினாடிக்கு 300 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது. அதிகாலை 4.00 மணிக்கு அணைக்கு நீர்வரத்து குறைந்ததால் ஆழியாறு அணையின் மதகுகள் அடைக்கப்பட்டன. மதியத்திற்கு மேல் அணைக்கு நீர்வரத்து மீண்டும் அதிகரித்ததால் அணையின் மூன்று மதகுகள் வழியாக தொடர்ந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்நிலையில் நேற்று காலை நிலவரப்படி ஆழியாறு நீர்மட்டம் 119.90 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கு தொடர்ந்து நீர்வரத்து அதிகமாக இருந்ததால், அணையின் எட்டு மதகுகள் திறக்கப்பட்டு தண்ணீர் வெளியேற்றப்பட்டது. தென்மேற்கு பருவமழை சீசனில் நிரம்பி வழிந்த ஆழியாறு அணை, வடகிழக்கு பருவமழை சீசன் துவங்கியதும் மீண்டும் நிரம்பி வழிந்தது. இந்தாண்டு இரண்டாவது முறையாக ஆழியாறு அணை நிரம்பி வழிந்தது.

ஆழியாறு அணையில் 650 ஏக்கர் பரப்பில் 3,860 மில்லியன் கனஅடி தண்ணீர் தேக்கப்பட்டுள்ளது. அணையில் அதிகபட்சமாக 3,864 மில்லியன் கனஅடி தண்ணீர் தேக்க முடியும். பி.ஏ.பி., அதிகாரிகள் கூறுகையில், "ஆழியாறு அணையின் பாசனப்பகுதியில் மழை பெய்ததால், பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டாம் என்று விவசாயிகள் கூறிவிட்டனர். இந்நிலையில், ஆழியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்ததால், மதகுகள் வழியாக தண்ணீர் வெளியேற்றப்பட்டது. மேல்ஆழியாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டு நவமலையில் நீர்மின்உற்பத்தி செய்யப்பட்டதால், அந்த தண்ணீரும் ஆழியாறு அணைக்கு வருகிறது. அதிகப்படியாக வரும் தண்ணீர் முழுவதும் ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது. ஆழியாறு அணையிலுள்ள 11 மதகுகளில் எட்டு மதகுகள் திறக்கப்பட்டு வினாடிக்கு 600 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணைக்கு நீர்வரத்து குறைந்ததும் மதகுகள் வழியாக தண்ணீர் வெளியேறுவது நிறுத்தம் செய்யப்படும்' என்றனர்.

**மழையால் சின்ன வெங்காயம் சேதம் : நிவாரணம் வழங்க கோரிக்கை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 03,2011,22:36 IST

பொங்கலூர் : "மழையால் அழுகி வீணாகி வரும் சின்ன வெங்காய பயிர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும்,' என, சின்ன வெங்காயம் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கோரிக்கை

விடுத்துள்ளனர்.பொங்கலூர் பகுதியில், கடந்த ஆடி பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டிருந்த சின்ன வெங்காயம், தற்போது அறுவடை பருவத்தை அடைந்துள்ளது. கடந்த ஒரு வாரமாக பெய்து வரும் தொடர் மழை காரணமாக, அறுவடை பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.அறுவடை செய்த வெங்காயத்தை, மார்க்கெட்டுக்கு கொண்டு செல்ல முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர். மழை காரணமாக கூலி ஆட்கள் வேலைக்கு வராததாலும், அவைகளை பாதுகாப்பாக உலர்த்த வழி இல்லாததாலும், காடுகளில் அப்படியே கிடக்கின்றன. அவை அழுகி வீணாகி வருகின்றன. இதனால், விவசாயிகள் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர். எதிர்பாராத மழையால் பாதிப்புக்கு உள்ளான விவசாயிகள், தங்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.
டி.ஆண்டிபாளையத்தை சேர்ந்த விவசாயி மோகன்ராஜ் கூறுகையில், ""இருப்பு வைக்கப்பட்டுள்ள சின்ன வெங்காயம் ஒரு சிப்பம் 500 ரூபாய்க்கு விற்பனையாகிறது. ஆனால், தற்போது அறுவடை செய்த வெங்காயம் முதல் தரம் 300 ரூபாய்க்கும், மழையால் சேதமடைந்த வெங்காயம் 150 ரூபாய்க்கும் விற்பனையாகிறது. மழை தொடர்ந்து பெய்து கொண்டே இருப்பதால், அறுவடை செய்ய முடியாமல் வெங்காயம் காட்டிலேயே அழுகி வீணாகி வருகிறது. இதனால், எங்களுக்கு பெரிய அளவில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட வெங்காய விவசாயிகளுக்கு அரசு நஷ்டஈடு வழங்க வேண்டும்," என்றார்.

**நெல்லுக்கு பதில் மக்காச்சோளம் விளைவிப்பு செலவு குறைவு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 03,2011,23:57 IST

பாலமேடு:குறைந்த செலவு, அதிக மகசூல், வருவாய் இரட்டிப்பு என்பதால், மதுரையில் விவசாயிகள் பலர் நெல்லுக்கு பதில் மக்காச்சோள சாகுபடியில் கவனம் செலுத்துகின்றனர்.வறண்ட பூமியின் தட்பவெப்பத்தை தாங்கி வளரும் பயிர் மக்காச்சோளம். கோழித்தீவனத்திற்கும், மாவு அடிப்படையிலான உணவு பொருள் உற்பத்திக்கும் மக்காச்சோளம் பெருமளவு பயன்படுகிறது. நெல் சாகுபடிக்கு விவசாயிகளுக்கு அதிகளவு கவனம் தேவை. தண்ணீர் தேவை அதிகம்.
மக்காச்சோளத்திற்கு குறைந்த தண்ணீர் போதுமானது. பராமரிப்பு செலவு மிகக்குறைவு.கை கொடுக்கும் இயற்கை உரம்: மதுரையில் அலங்காநல்லூர், எர்ரம்பட்டி, பாலமேடு உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் நெல் சாகுபடிக்கு பதிலாக மக்காச்சோளத்திற்கு மாறி வருகின்றனர். பயிரிடுவதற்கு முன் மண்ணில் தழைச்சத்து, இயற்கை உர மேலாண்மையை வேளாண் அதிகாரிகள் ஆலோசனைப்படி விவசாயிகள் மேற்கொள்கின்றனர்.

இதனால் மண்ணின் தன்மை மாறாமல், இயற்கை வளம் காக்கப்படுகிறது. இது அதிக மகசூலுக்கு வித்திடுகிறது.மகிழ்ச்சியில் விவசாயிகள்: நெல் சாகுபடியை விட குறைந்த செலவு, அதிக மகசூல், இரட்டிப்பு வருவாய் கிடைப்பதால் மக்காச்சோள விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.
ஆண்டுக்கு இரண்டு முறை சாகுபடி நடக்கிறது. பிஞ்சு மக்காச்சோளக் கதிர்களை, விற்பனைக்காக சந்தைகளுக்கு கொண்டு செல்கின்றனர். முற்றிய மக்காச்சோளம் வியாபாரிகளால் மொத்தமாக கொள்முதல் செய்யப்படுகிறது. இவர்கள் மூலம் வெளிமாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது.

**உரங்களின் விலை உயர்வால் விவசாயத்திற்கு ஆபத்து**

பதிவு செய்த நாள் : நவம்பர் 03,2011,22:01 IST

ஸ்ரீவில்லிபுத்தூர்:உரங்களின் விலை இரு மடங்காக உயர்ந்ததால், ஸ்ரீவில்லிபுத்தூரில் விவசாயம் செய்யும் நிலத்தின் பரப்பு குறையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.
ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் கடந்த இரு வாரங்களாக மழை பெய்கிறது. மழையால் கண்மாய்கள் நிரம்பாமல் இருந்தாலும், மானவாரி விவசாயமான மக்கா சோளம், மம்சாபுரம், விழுப்பனூர், வத்திராயிருப்பு பகுதிகளில் நெல், பிள்ளையார்நத்தம் பகுதிகளில் வெங்காயமும் விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். இந்நிலையில், உரத்தின் விலை இரு மடங்காக உயர்ந்துள்ளது. கடந்த இரு மாதங்களுக்கு முன் 50 கிலோ மூடை யூரியா ரூ.260 , டி.ஏ.பி. ,ரூ.465 , பொட்டாஷ் ரூ.260 , காம்பளக்ஸ்(20-20-20) ரூ.450 , காம்பளக்ஸ்(17-17-17) 28 ரூபாயாக இருந்தது. தற்போது யூரியாரூ. 285, டி.ஏ.பி.,ரூ. 910 , பொட்டாஷ் ரூ. 565, காம்பளக்ஸ்(20-20-20) ரூ. 650, காம்பளக்ஸ்(17-17-17)730 ரூபாயாக உயர்ந்துள்ளது. உரங்களின் விலை உயர்வால், விவசாயம் செய்வதற்கு அதிக பணம் செலவிட வேண்டியுள்ளதால், விவசாயம் செய்யும் நிலங்களின் பரப்புகளை விவசாயிகள் குறைத்துள்ளனர்.

தேசிய வேளாண் விழிப்புணர்வு சங்க மாவட்ட செயலாளர் நாகராஜன் கூறியதாவது: மழையால் கண்மாய்களில் போதிய தண்ணீர் வரத்து இல்லாததால், மழையை நம்பி விவசாயத்தில் ஈடுபட்டுள்ளோம். உரங்களின் விலை கடுமையாக உயர்வு விவசாயிகளை நஷ்டத்தில் ஆழ்த்தி வருகிறது. உரங்களின் விலை உயர்விற்கு ஏற்ப விளை பொருட்களுக்கு விலை கிடைக்குமா என்பது சந்தேகமாக உள்ளது. இதனால் விவசாய நில பரப்பை குறைத்து வருகின்றனர். விளை நிலங்கள் தரிசாகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது,என்றார்.

**மழை நீர் தேங்கியதில் அழுகிய உளுந்து**

பதிவு செய்த நாள் : நவம்பர் 03,2011,21:54 IST

காரியாபட்டி:உளுந்து பயிரில் மழை நீர் தேங்கி அழுகி, பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.காரியாபட்டி அருகே உள்ள பிசிண்டி, பாம்பாட்டி, பாஞ்சார் பகுதியில் மழை பெய்தது. இதனை நம்பி இப்பகுதியில் 200க்கும் மேற்பட்ட ஏக்கரில் உளுந்து பயிரிட்டன . அவ்வப்போது மழை பெய்து அனைத்து பயிர்களும் நன்றாக வளர்ந்தன. பருவத்திற்கு வரும் சமயத்தில்,தொடர்ந்து மழை பெய்ததால் , மழை நீர் தேங்கி பயிர் வகை செடிகள் அனைத்தும் பாதிக்கப்பட்டன. உளுந்து செடிகள் பறிக்கும் நேரத்தில் மழை பெய்ததால் பறிக்க முடியாமல், செடியிலே பயிர்கள் அழுகின.

விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். விவசாயி பாண்டியராஜன் கூறியதாவது: இந்த ஆண்டு நல்ல மழை பெய்யும் என நம்பி 10 ஏக்கரில் உளுந்து பயிரிட்டேன். தரிசு நிலங்களாக இருந்த காடுகளை சுத்தம் செய்யவே பல ஆயிரங்களை செலவு செய்தேன். இதையடுத்து கடனை வாங்கி உளுந்து பயிரிட்டு நல்ல விளைச்சலுக்கு வந்தது. சமீபத்தில் பெய்த தொடர் மழைக்கு பயிர்கள் அழுகியதால் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது, என்றார். போதிய இழப்பு தொகை வழங்க வேண்டும் என விவ சாயிகள் எதிர் பார்க் கின்றனர்.

தினகரன்

**உணவு பணவீக்கம் 12.21 சதவீதமானது**

பதிவு செய்த நாள் : 11/4/2011 5:58:57



புதுடெல்லி : முதன்மை பணவீக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கும் உணவு பணவீக்கம் கடந்த அக்டோபர் 22ம் தேதியுடன் முடிந்த வாரத்தில், 9 மாதங்களில் இல்லாத அளவுக்கு 12.21 சதவீதமாக அதிகரித்துள்ளது. முந்தைய வாரத்தில் இது 11.43 சதவீதமாக இருந்தது. காய்கறிகள் 29 சதவீதமும், பழங்கள் 11.6 சதவீதம் உயர்ந்தது.
அடுத்தபடியாக, முதன்மை பொருட்கள் 12% உயர்ந்தது. எனினும், எரிபொருள் மற்றும் மின்சாரம் 14.5 சதவீதமாகவும், உணவுப் பொருள் அல்லாதவை 6.43 சதவீதமாகவும் குறைந்தது.

உணவு பணவீக்கம், கடந்த 3 வாரங்களாக தொடர்ந்து இரட்டை இலக்கத்திலேயே இருந்து வருகிறது. கடந்த 2010 மார்ச் முதல் இதுவரை 13 தடவை தொடர்ந்து கடன் வட்டியை ரிசர்வ் வங்கி உயர்த்தி உள்ளது. இருந்த போதிலும் பணவீக்கம் எதிர்பார்த்த அளவுக்கு இன்னமும் குறையவில்லை. கடந்த செப்டம்பர் மாதத்தில் முதன்மை பணவீக்கம் 9.72 சதவீதமாக இருந்தது.

வரும் டிசம்பர் முதல் பணவீக்கம் படிப்படியாகக் குறையும் என்பதால், டிசம்பரில் வெளியாக உள்ள 3வது காலாண்டுக்கான நிதிக் கொள்கை மீதான மறு ஆய்வறிக்கையில் வட்டி விகிதம் அதிகரிக்கப்பட மாட்டாது என ரிசர்வ் வங்கி கடந்த மாதம் வெளியிட்ட 2வது காலாண்டு ஆய்வறிக்கையில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

‘பண்டிகையே காரணம்’

ஸீ உணவுப் பொருள் பணவீக்கம், தொடர்ந்து உயர்ந்து வருவது கவலை அளிக்கிறது. குறிப்பாக 3 வாரங்களாக இரட்டை இலக்கத்தில் இருந்து வருவது அபாயகரமானது. எனினும், நவராத்திரி, தீபாவளி என பண்டிகைகளால் தேவை அதிகரித்ததே அக்டோபரில் உணவுப் பொருள் விலை உயர்ந்ததற்கு காரணம். நவம்பர் முதல் விலை குறைய வாய்ப்புள்ளது என மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
ஸீ உணவு பணவீக்கம் மொத்த விலை குறியீட்டு எண் (டபிள்யு.பி.ஐ.) அடிப்படையில்

கணக்கிடப்படுகிறது.

ஸீ ஓர் ஆண்டில் காய்கறிகள் விலை 28.89 சதவீதம் உயர்ந்துள்ளது.

ஸீ முட்டை, கறி, மீன் ஆகியவை ஓர் ஆண்டில் 13.36 சதவீதம் விலை உயர்ந்துள்ளது.

## குன்னூரில் 30% தேயிலை தேக்கம்

பதிவு செய்த நாள் : 11/4/2011 5:58:27



குன்னூர்: நீலகிரி மாவட்டம் குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் நேற்று ஏலம் நடந்தது. இதில் மொத்தம் 5 லட்சத்து 74 ஆயிரத்து 431 கிலோ தேயிலைத்தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 3 லட்சத்து 19 ஆயிரத்து 452 கிலோவும், டஸ்ட் ரகம் 2 லட்சத்து 64 ஆயிரத்து 979 கிலோவும் அடங்கும். வெளிநாட்டு வர்த்தகர்கள் மற்றும் உள்நாட்டு வர்த்தகர்கள் குறைந்த அளவு தேயிலைத் தூளையே கொள்முதல் செய்தனர்.

இதனால், 30 சதவீத தேயிலைத் தூள் தேக்கமடைந்தது. ஏலத்தில் கிலோ ஒன்றுக்கு ஸி2 வரை விலை சரிந்தது. இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ஸி50 முதல் ரூ.58 வரையிலும், உயர் வகை ரூ.75 முதல் ரூ.80 வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ஸி52 முதல் ஸி61 வரையிலும், உயர் வகை ஸி70 முதல் ஸி79 வரையிலும் விலை கிடைத்தது.

கடந்த சில வாரங்களாகவே தேயிலைத்தூளுக்கு குறைந்த பட்சவிலை ஸி50க்கு மேல் தாண்டியுள்ளதால் உற்பத்தியாளர்கள் ஓரளவு நிம்மதி அடைந்துள்ளனர். அடுத்த ஏலம் 9ம் தேதி நடக்க உள்ளது. இதில் 3 லட்சத்து 25 ஆயிரத்து 43 கிலோ தேயிலைத்தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## *காய்கறிகள், பருப்பு வகைகள் விலை அதிகரிப்பால் உணவு பணவீக்கம் 12.21 சதவீதமாக உயர்வு*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*காய்கறிகள், பருப்பு வகைகள், பழங்கள் மற்றும் பால் போன்ற அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிப்பால், அக்டோபர் 22–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 12.21 சதவீதமாக உயர்ந்துள்ளது. மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் இந்த பணவீக்கம் முந்தைய வாரத்தில் 11.43 சதவீதமாக இருந்தது. உணவு பணவீக்கம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.*
*நிதி அமைச்சர்*
*உணவு பணவீக்கம் உயர்வு குறித்து மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவிக்கையில், "பணவீக்கம் உயர்ந்து வருவது கவலை அளிப்பதாக அமைந்துள்ளது. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தேவைப்பாடு அதிகரித்ததையடுத்து உணவு பணவீக்கம் உயர்ந்துள்ளது. இதுகுறித்த சரியான நிலவரம், நவம்பர் மாதத்திலிருந்து தெரியும்" என்று கூறி உள்ளார்.*
*கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில் ஓராண்டு கால அடிப்படையில் காய்கறிகள் மற்றும் பருப்புகள் விலை முறையே 28.89 சதவீதம் மற்றும் 11.65 சதவீதம் உயர்ந்துள்ளது. பழங்கள் விலை 11.63 சதவீதம் அதிகரித்துள்ள நிலையில் பால் விலை 11.73 சதவீதம் உயர்ந்துள்ளது. முட்டை, மீன், இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை 13.36 சதவீதம் உயர்ந்துள்ளது. தானியங்கள் விலை 4.13 சதவீதம் அதிகரித்துள்ளது.*
*வெங்காயம்*
*அதேசமயம் வெங்காயம் மற்றும் கோதுமை விலை முறையே 20.33 சதவீதம் மற்றும் 1.54 சதவீதம் குறைந்துள்ளது. உணவு சாரா பொருள் பணவீக்கம் 7.67 சதவீதத்திலிருந்து 6.43 சதவீதமாக குறைந்துள்ளது. எரிபொருள் மற்றும் எரிசக்தி பணவீக்கமும் 14.70 சதவீதத்திலிருந்து 14.50 சதவீதமாக குறைந்துள்ளது.*

பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் 20 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ள முதன்மை பொருள்கள் பணவீக்கம் 11.75–லிருந்து 12.08 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்த பொது பணவீக்கம் கடந்த 2010 டிசம்பர் மாதத்திலிருந்து 9 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது. கடந்த செப்டம்பர் மாதத்தில் இது 9.72 சதவீதமாக உள்ளது.

பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் பாரத ரிசர்வ் வங்கி கடந்த 19 மாதங்களில் முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை 13 முறை உயர்த்தி உள்ளது. இந்நிலையிலும் பணவீக்கம் கட்டுப்படவில்லை. எனவே இது தேவைப்பாட்டை ஈடுகட்டும் வகையில் போதுமான அளவிற்கு பொருள்கள் கிடைக்காததால் ஏற்படுகிறது என்று பொருளியல் நிபுணர் ஒருவர் தெரிவிக்கிறார்.

பொருளாதார வளர்ச்சி

பணவீக்கம் அதிகரிப்பால் பொதுமக்கள் அவர்களது வருமானத்தில் பெரும்பகுதியை உணவு பொருள்கள் வாங்க செலவிட வேண்டியுள்ளது. இதனால் இதர பொருள்கள் விற்பனை குறைந்து பொருளாதார வளர்ச்சி பாதிக்க வாய்ப்புள்ளது. எனவே பணவீக்கத்தை கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகும்.